**வன பரிபாலனத் திணைக்கள நிதியம் - 2015**

---

வன பரிபாலனத் திணைக்கள நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு வன பரிபாலன கட்டளைச் சட்டத்தின் (451 ஆம் அதிகாரம்) 64 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்களின் 10- ஊ ஆம் இலக்க கட்டளையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, வன பரிபாலனத் திணைக்கள நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) முடிவடைந்த குற்றவியல் வழக்குகளுக்குரிய தண்டப் பணம் நீதி மன்றத்தின் மூலம் நிதியத்திற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய உத்தியோகத்தர்களுக்குச் செலுத்த வேண்டியதாகக் காணப்பட்ட பரிசுப் பணத்தை கணிப்பீடு செய்து ஒதுக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காகக் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,130,600 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் நுவரெலியா உயர் நீதிமன்றத்திலிருந்து கிடைக்க வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 36,335 தொகை இரு தடவைகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) வன பரிபாலனத் திணைக்களத்தின் மூன்று உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 409,569 தொகையான ஊழியர் சம்பளம் வன பரிபாலன நிதியத்தின் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

#### 2.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினது தாபன விதிக் கோவையின் XIV அத்தியாயத்தினது 4.5 மற்றும் 4.6 ஆம் பிரிவுகளின்படி உத்தியோகத்தர்கள் நிரந்தர சேவை நிலையத்திற்கு வெளியில் கடமைகளில் ஈடுபடுகின்ற போது இணைந்த படி வழங்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக உணவு மற்றும் தங்குமிட வசதிகளுக்காக ரூபா 80,720 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 19,583,876 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 19,286,799 ஆகியமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 297,077 தொகையான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது நீதிமன்றத் தண்டப் பண பெறுவனவு மீளாய்வாண்டில் ரூபா 1,415,381 இனால் அதிகரித்திருந்த போதிலும் பாதுகாப்பு செலவினம், ஏனைய கொடுப்பனவுகள் மற்றும் பயிற்சிச் செலவினம் முறையே ரூபா 1,259,801 இனாலும், ரூபா 302,734 இனாலும், ரூபா 112,294 இனாலும் அதிகரித்தமை வருமானத்தின் அதிகரிப்பிற்கு ஒப்பாக மிகை அதிகரிக்காமைக்கு தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

குற்றங்களை சட்டத்தின் முன்கொண்டுவரும் வன பரிபாலனத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கும் தகவல் வழங்குவோருக்கும் பரிசுப் பணத்தை வழங்குதல், சாட்சியாளர்களுக்கும் வன உத்தியோகத்தர்களுக்கும் நீதிமன்ற பிரயாணங்களுக்காக செலவினங்களைச் செலுத்துதல் மற்றும் வன உத்தியோகத்தர்கள் தமது செயற்பாடுகளை செயற்திறனாக நடாத்திச் செல்வதற்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் உள்ளடங்கலாக வன பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு செலவினங்களைச் செய்தல் நிதியத்தின் அடிப்படை நோக்கமாகும்.

நிதியத்தின் வருமானம் மற்றும் செலவினம் தொடர்பாக கவனத்தில் கொள்ளும் போது முன்னைய ஆண்டின் வருமானத்தில் செலவிடப்பட்ட அளவு 38 சதவீதமாக இருந்ததுடன் மீளாய்வாண்டின்போது வருமானத்தில் செலவிடப்பட்ட அளவு 40 சதவீதமாகும். இது தொடர்பாக மேலும் பரிசேரித்த போது ஒவ்வொரு வருடமும் வருமானத்தில் அதிக அளவு செலவிடப்படாமையால் அந்தப் பணம் பொதுத் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நீதிமன்றத்தின் மூலம் அறவிடப்பட்ட பணம் வன நிதியத்தில் செலவு வைக்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டிருந்ததுடன் ஆண்டின்போது ஒவ்வொரு மாதத்திற்காகவும் கிடைக்கவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் வருமானத்தை சரியாகக் கணிப்பிடுவதற்கோ அல்லது அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளைச் செய்தலோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வனக் குற்றவியல் வழக்குகள் முடிவடைந்த போதிலும் அந்த வன குற்றங்களை தடுப்பதற்காக பங்களிப்புச் செய்த உத்தியோகத்தர்களினால் பரிசுப் பணத்தைக் கோருவதற்கும் கோரப்பட்ட பரிசுப்பணத்தை வழங்குவதிலும் உள்ள தாமதங்களைத் தடுப்பதற்காக முறையான வழிமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

### 4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

(அ) இலங்கை மத்திய வங்கியின் நீண்டகால ரூபாய்க்கடன் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 2,300,000 தொகை 2015 யூலை 01 இல் உள்ளவாறு முதிர்ச்சியடைந்திருந்ததுடன் மத்திய வங்கியினால் வைப்புக்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும் 2016 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் இந்தப் பணத்தை மீள முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் சேமிக்கப்பட்ட பணம் கூட்டாகச்சேர்ந்து 2015 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 132,276,277 தொகை காசு மீதியாக இருந்ததுடன் இந்த சேமிக்கப்பட்ட பணம் சிறந்த முறையில் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2015 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

------------------------------------

சட்டத்தை அமுலாக்குகையில் பணியாற்றும் உத்தியோகத்தர்களது பணியை மதிப்பீடு செய்து நலன்களை வழங்கும் பிரதான நோக்கத்தில் நிறுவப்பட்ட வன பரிபாலனத் திணைக்கள நிதியத்திலிருந்து வழங்கப்படும் வெகுமதித்தொகை செலவினக் கட்டுப்பாட்டின் மூலம் கட்டுப்படுத்தக்கூடிய செலவினமல்லாத போதிலும், மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டுகளினதும் 04 செலவின விடயங்களில் மதிப்பீட்டுச் செலவினத்தில் 20 சதவீதம் முதல் 61 சதவீதத்திற்கிடையில் சேமிப்பு காணப்பட்டது. ஒழுங்குமுறையான செலவின நிருவாகம் இச் சேமிப்புக்களுக்கான காரணம் என முகாமைத்துவம் தெரிவித்திருந்த போதிலும் ஒவ்வொரு வருடமும் தொடர்ச்சியாக கவனத்தில் கொள்ளக்கூடிய சேமிப்பு காணப்பட்டமையால் பாதீட்டு மதிப்பீடு சரியான அடிப்படையில் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது வன பரிபாலன நாயகத்திற்குத் தெரிவிக்கப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | - ஆண்டிற்குரிய வருமானம் மற்றும் செலவினங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் |
| (ஆ) | வருமானக் கட்டுப்பாடு | - நீதிமன்றம் மூலம் அறவிடப்பட்ட தண்டப்பணத்தை தாமதமின்றி திணைக்களம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் |
| (இ) | நிதிக் கட்டுப்பாடு | - கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு இணங்க நிதியத்திலிருந்து செலவினங்களைச் செய்தல் |